27.10.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## நாட்டுச் சேவல் வளர்த்தால் அதிக வருமானம் ஈட்டலாம்: கால்நடை ஆராய்ச்சி மையத் தலைவர் பேச்சு



விவசாயிகள் நாட்டுச் சேவல்களை வளர்த்தால், 3 மாதங்களில் அதிக வருமானம் ஈட்டலாம் என்று திருவண்ணாமலை கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத் தலைவரும், இணைப் பேராசிரியருமான தியோபிலஸ் ஆனந்தகுமார் பேசினார்.

திருவண்ணாமலை, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அருகே பை-பாஸ் சாலையில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் இயங்கி வருகிறது. இந்த மையத்தில், நாட்டுக் கோழி

வளர்ப்பு குறித்த ஒரு நாள் இலவசப் பயிற்சி முகாம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

முகாமைத் தொடங்கி வைத்து ஆராய்ச்சி மையத் தலைவரும், இணைப் பேராசிரியருமான தியோபிலஸ் ஆனந்த்குமார் பேசுகையில், தற்போதைய சூழ்நிலையில் விவசாயிகள், நாட்டுச் சேவல்களை வளர்த்தால் 3 மாதங்களில் அதிக வருமானம் ஈட்டலாம். புரதச் சத்துள்ள அசோலா, கரையான் ஆகியவற்றை வளர்த்து சேவல்களுக்கு தீவனமாகக் கொடுப்பதன் மூலம் குறைந்த செலவில் அதிக எடையுள்ள சேவல்களைப் பெறலாம் என்றார். தொடர்ந்து, ஆராய்ச்சி மைய உதவிப் பேராசிரியர் துரைராஜன், கோழிகளைப் பாதிக்கும் நோய்களும், அவற்றைத் தடுக்கும் முறைகளும் என்ற தலைப்பில் பேசினார். வங்கிகளில் கடன் பெறுவதற்கான திட்ட அறிக்கைகள் இந்த மையத்தில் தயாரித்து தரப்படும் என்றும் அவர் பேசினார். இந்தப் பயிற்சி முகாமில், திருவண்ணாமலை, ஆரணி, கலசப்பாக்கம், தண்டராம்பட்டு, வந்தவாசி, போளூர், செங்கம், துரிஞ்சாபுரம், கீழ்பென்னாத்தூர் உள்பட மாவட்டம் முழுவதும் பல்வேறு பகுதிகளில் இருந்து 100-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டனர்.

## பாம்பன் மீனவர் வலையில் சிக்கிய அரியவகை கிளி மீன்



பாம்பன் பகுதி மீனவரின் வலையில் அரியவகை மீனான பெரிய கிளி மீன் புதன்கிழமை சிக்கியது.

பாம்பன் தென்கடல் பகுதியில் அதிக அளவில் பவளப் பாறைகள் மற்றும் அரியவகை மீன்களும், கடல் ஆமை, கடல் பாம்பு, கடல் பசு, கடல் குதிரை உள்ளிட்டவை உள்ளன.

பாம்பன் பகுதியிலிருந்து செவ்வாய்க்கிழமை மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களில் ஒரு மீனவரின் வலையில், 11 கிலோ எடையுள்ள அரியவகை கிளி மீன் சிக்கியிருந்தது. இந்த மீனை வெளிநாட்டுக்கு அனுப்புவதற்காக வியாபாரிகள் கிலோ ரூ. 290 என மொத்தம் ரூ. 3 ஆயிரம் விலை கொடுத்து வாங்கிச் சென்றனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## தீவனத்துக்கு தட்டுப்பாடு: சோள தட்டு விலை உயர்வு

சத்தியமங்கலம்: சத்தியமங்கலம், சுற்றுவட்டார பகுதிகளில், மழையின்றி தீவன தட்டுப்பாடு ஏற்பட்டதால், சோளத்தட்டு விலை உயர்ந்துள்ளது. சத்தியமங்கலம் பகுதியில், மழையில்லாததால், சுற்றுவட்டாரத்தில், 500 ஏக்கர் பரப்பளவில், மக்காச்சோளம், வாழை என, சாகுபடி செய்யப்பட்ட பயிர்கள் காய்ந்து விட்டன. இதனால், கால்நடை தீவனங்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால், தப்பிப் பிழைத்துள்ள மக்காச்சோளத்தட்டுக்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது, தற்போது சோளத்தட்டு கட்டு ஒன்று, 25 ரூபாய் வரை விற்கப்படுகிறது. கால்நடை வளர்ப்பவர்கள், வேதனையடைந்தாலும், வேறு வழியின்றி வாங்கிச் செல்கின்றனர்.

## பவானி சுற்றுவட்டார பகுதிகளில் சேனைக்கிழங்கு அறுவடை தீவிரம்

பவானி: பவானி சுற்றுவட்டார பகுதிகளில், சேனை கிழங்கு அறுவடை பணிகள் தீவிரமடைந்துள்ளது. பவானி, மயிலம்பாடி, ஜம்பை, ஆப்பகூடல், ஒரிச்சேரி உள்ளிட்ட கிராம விவசாயிகள், சேனைக்கிழங்கு அதிக அளவில் பயிர் செய்துள்ளனர். ஏழு முதல், ஏழரை மாதத்தில் பலன் தரக்கூடிய சேனைக்கிழங்கு சித்திரை பட்டத்தில், பயிரிடப்பட்டது. தற்போது, அறுவடை பணிகள் துவங்கியுள்ளன. இதுகுறித்து, கோபியை சேர்ந்த சேனைக்கிழங்கு வியாபாரி ஒருவர் கூறியதாவது: தற்போது, பவானி பகுதியில் அறுவடை செய்யப்படும் சேனைக்கிழங்கு மதுரை, திருநெல்வேலி மற்றும் கேரளா பகுதிகளுக்கு அனுப்பப்படுகிறது. விவசாயிகளிடம் ஒரு கிலோ, 18 ரூபாய் வரை வாங்குகிறோம். வெளிமார்க்கெட்டில் 22 முதல், 25 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

## 'சவ்சவ்' பந்தலில் புகும் விலங்குகள் - கட்டுப்படுத்த புதிய தொழில்நுட்பம்



நிலத்தை உழவடை செய்வதற்கு முன் தழைச்சத்து மிக்க பசுந்தாள் இயற்கை உரங்களான தக்கைப்பூண்டு, சணப்பை, கொழிஞ்சி, நெட்டி உள்ளிட்ட தாவரங்களை பயிரிட்டு பூ பூக்கும் தருணத்தில் நிலத்தில் மடக்கி உழவடை செய்வர். இதனால் இயற்கை முறையில் மண் சத்து அதிகரித்து மண் வளம் பெருகும். மலைப்பயிரான சவ்சவ் சாகுபடியில் விவசாயிகள் இம்முறையை கையாள்கின்றனர்.

**'வாழை'**



திருமண இல்லங்கள் தோறும் வாழை மரங்கள். திருவிழா மண்டபங்களிலே வாழைத் தோரணங்கள். மனித வர்க்கத்தின் இன்ப வாழ்விலே வாழை என்பது ஓர் இணையற்ற புனித தாவரமாக அமைந்து விட்டது. அரை மீட்டர் சதுரமும், அரை மீட்டர் அகலமும் ஆழமும் உள்ள குழிகளை தோண்டி எட்டு அடிகளுக்கு ஒன்றாக இடைவெளி விட்டு வாழை கன்றுகளை நடவு செய்தலே முறையான செயலாகும்.

கன்றுகள் நடப்பட்ட குழிகளில் செழிப்பாக மண்ணை நிரப்பி கெட்டிப்படுத்தி, அவற்றின் நிலத்தை நன்கு குத்தி வரும் பட்சம், குருத்துக்கள் குறுகிய காலத்தில் உயர்ந்து வரும். காய்ந்த எருத்தூள், நைட்ரஜன் உரமாக இட்டு வர இயற்கையான நீர் வளம், நில வளம் சார்ந்த கண் காணிப்பிலே நல்ல பலனை தரும்.

நோய் தீர்க்கும் மருந்து

காண்போருக்கு வாழை தோட்டங்கள் கண்களுக்கு குளிர்ச்சியையும், சுத்தமான காற்றையும் தருகிறது. விவசாயிகளுக்கு சிறந்த தொடர் வருமானத்தை கொடுக்கின்றன. மொந்தம், பேயன், பூவன், ரஸ்தாலி, ரோபஸ்ட்டா, நாடான், கற்பூரம், ஏலக்கி ரகங்கள் மற்றும் மலை வாழை, செவ்வாழை, தோட்ட வாழை, குடகு வாழை, சிறுமலை வாழை என வாழையின் எண்ணற்ற பெயர் வகைகளுக்கு எல்லையே இல்லை.

இவற்றில் மாவுச்சத்து, புரதம், கால்சியம், நார்ச்சத்து, உயர்ந்த உயிர் சத்துக்கள் அடங்கியுள்ளன.

வாழைப்பழம் ஜீரணத்தை சீராக்குவதோடு உடல் நலத்தை காக்கவும் செய்கிறது. ரஸ்தாலி அதிகமான ஊட்டச்சத்தை உடம்புக்கு அளிக்கிறது. நாட்டுப்பழம் உடலுக்கு குளிர்ச்சியை தருகிறது.

பச்சை நாடன் உடம்பின் அதீத உஷ்ணத்தை மட்டுப்படுத்துகிறது. மலை வாழை, நாடியை சமநிலைப்படுத்துகிறது. நேந்திரம் சரீரப் புஷ் டியை உண்டாக்குகிறது. மொந்தன் பித்தத்தை போக்குகிறது. குடலில் உள்ள கிருமிகளை அழிக்கிறது.

புனித மரமானது வாழை

வாழைப் பூவின் துவர்ப்பு சுவை ஒவ்வாமையை மாற்றுகிறது. வாழைச்சாறு பருகி வந்தால் சிறுநீரக கற்கள் கரைந்து போகும். வாழை இலையில் உண்டு வந்தால் தேகத்தில் மினு மினுப்பு உண்டாகும்.

வாழைப்பிஞ்சு நீரழிவு நோய்க்கு சிறந்ததாகும். வாழைச்சாறு உடலுக்கு பலன் தரும். வாழைத்தண்டை சமைத்து சாப்பிட்டால் குடல் பிணிகள் தொலையும் என சித்த மருத்துவ குறிப்புகள் கூறுகின்றனர். வாழை நார்கள் பூ மாலை கட்ட பயன்படுகிறது. வாழை மட்டைகளில் அழகு பொருட்கள், ஆடைகள் தயாரிக்கின்றனர். வாழை கழிவுகள் மண்ணுக்கு இயற்கை உரமாக பயன்படுகிறது.

**- எஸ்.நாகரத்தினம், முன்னோடி விவசாயி, விருதுநகர்.**

## பட்டறிவு பயணம்: 'அட்மா' மானியம்



தமிழ்நாடு வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை (அட்மா) திட்டத்தின் கீழ் வெளி மாநில அளவில் 'பட்டறிவு பயணம்' மேற்கொள்ள, விவசாயி ஒருவருக்கு

நாள் ஒன்றுக்கு 800 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. உள் மாநில அளவில் விவசாயி ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 400 ரூபாய். மாவட்ட அளவில் 300 ரூபாய் என 'அட்மா' மானியம் வழங்குகிறது. விவசாயிகள் குழு அமைக்க குழு ஒன்றிற்கு பயிற்சி அளிக்க 5000 ரூபாய், நிதி வழங்க 10 ஆயிரம், ஊக்கத்தொகை மற்றும் பரிசுக்தொகையாக குழு ஒன்றிற்கு 20 ஆயிரம் ரூபாய் என அட்மா மானியங்களை வாரி வழங்குகிறது. மானியம் பெற வேளாண் அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம்.

## இஸ்ரேல் தொழில் நுட்பத்தில் விவசாயிகள்... தோட்டக்கலை பயிர் உற்பத்தி அதிகரிப்பு

தேனி, மாவட்டத்தில் விவசாயிகள் இஸ்ரேல் தொழில் நுட்பங்களை கையாள்வதால் தோட்டக்கலை பயிர் உற்பத்தி அதிகரித்து வருகிறது. மாவட்ட மொத்த சாகுபடி பரப்பில் 1,13,797 எக்டேரில் தோட்டக்கலை பயிர்கள் மட்டும் 40 சதவீதம் சாகுபடியாகிறது. இச்சாகுபடியில் தேனி மாநிலத்தில் இரண்டாவது இடம் பிடிக்கிறது.

மாவட்டத்தின் மண் வளமும், இதமான சீதோஷ்ண நிலையும் தோட்டக்கலை பயிர்கள் செழித்து வளர சாதகமாக உள்ளன. இதனால் விவசாயிகள் காய்கறி, பழ சாகுபடியில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். சாகுபடிகளில் இஸ்ரேல் தொழில் நுட்பங்களை சில ஆண்டுகளாக விவசாயிகள் கையாள்வதால் உற்பத்தி இருமடங்காக உயர்ந்து வருகிறது.

பசுமை குடில்

சொட்டு நீர்பாசனம், பசுமை குடில், நிலப்போர்வை, குழி தட்டு மற்றும் திசு நாற்றுகள் போன்ற இஸ்ரேல் தொழில் நுட்பங்கள் கையாளப்படுகின்றன. தென் மாவட்ட அளவில் தேனி மாவட்ட விவசாயிகள் இத் தொழில் நுட்பங்கள் அதிகம் பயன்படுத்தி வருகின்றனர். சாகுபடியை பெருக்கும் நோக்கில் தோட்டக்கலைத் துறையில் ஆண்டுக்கு 12 முதல் 14 கோடி ரூபாய் மானியமாக செலவிடப்படுகிறது.

2.40 லட்சம் டன் சாகுபடி

16 ஆயிரம் எக்டேரில் சொட்டு நீர்பாசன வசதி, 27ஆயிரம் சதுர மீட்டர் பரப்பில் பசுமை குடில்கள், 228 எக்டேரில் நிலப்போர்வை திட்டங்கள்

செயல்படுத்தப்பட்டுள்ளன. இத் தொழில் நுட்பங்களால் ஆண்டுக்கு 2.40 லட்சம் டன் காய்கறி, 3.60லட்சம் டன் பழங்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. ஜிநைன் வாமை 5 ஆயிரம் எக்டேரில் சாகுபடி செய்வகால் ஆண்டுக்கு 1.50லட்சம் டன் உற்பக்கியாகிறகு. அடுத்த இடத்தை மாம்பழம் பிடிக்கிறது. வாழைக்கு நிலப்போர்வை

சொட்டுநீர்பாசனக்குடன் நிலப்போர்வை கொழில் நுட்பங்களை கடைபிடிக்கின்றனர். நிலப்போர்வையால் களைகள் வளராது. சாகுபடி செலவில் 30 சதவீதம் மிச்சப்படுத்தும். நிலத்தில் சூரிய ஒளி நேரிடையாக விழாததால் மண் இறுகாமல் இளக்கமாக இருக்கும்.

இதனால் பயிரின் வேர் வளர்ச்சி அதிகமாகி செடி நன்கு வளர்ந்து, உற்பத்தி அதிகமாகும். சொட்டுநீர் பாசனக்கால் சாகுபடியில் 50சகவீக நீர் மிச்சமாகிறகு. இதனுடன் உரமும் சேர்த்து வழங்குவதால் உற்பத்தி அதிகரிக்கிறது. தோட்டக்கலை துணை இயக்குனர் கிஷோர் குமார் கூறுகையில்,"நவீன தொழில் நுட்பங்களை விவசாயிகள் அதிகளவில் பயன்படுத்துகின்றனர். இதனால் இந்த ஆண்டு 20 சதவீத உற்பத்தி அதிகரித்துள்ளது,"என்றார்.

## மலைப்பகுதியில் மீண்டும் உயிர் பெறுமா இஞ்சி விவசாயம்

காண்டிக்குடி, காண்டிக்குடி மலைப்பகுகியில் அழிவின் விளிம்பில் உள்ள இஞ்சி விவசாயம் மீண்டும் உயிர்க்கெழ கோட்டக்கலை ஆராய்ச்சி நிலைய ஆய்வு கைகொடுக்குமா என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

மலைப்பகுதியில் பிரதான விவசாயமாக விளங்கிய மருத்துவ குணம் நிறைந்த மலை இஞ்சியின் சாகுபடி பரப்பு சுருங்கி அழிவின் விளிம்பில் உள்ளகு. கடியன்குடிசை கோட்டக்கலை ஆராய்ச்சி நிலையக்கில் கடந்த சில மாதங்களுக்கு முன் நிழல் வலை பராமரிப்பில் இஞ்சி சாகுபடி ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இதுகுறித்து ஆராய்ச்சி நிலைய தலைவர் சுப்ரமணி கூறியதாவது:

'மாறன்' வகை இஞ்சியை மேட்டுப் பாத்தி அமைத்து ஆய்வு செய்ததில், நன்கு வளர்ந்து முழுமையான பருவத்தை எட்டியுள்ளது. இதில் நோய் பாதிப்பு, இயற்கை முறையில் வளரும் கிறன், காரம் ஆகியவை குறிக்கு ஆய்வு செய்யப்படுகிறகு. ஆயிரக்கு நூறு அடிக்கு மேல் இங்கு நிலவும் சீகோஷ்ண நிலைக்கு ஏற்ப இவை நன்கு வளர்ந்துள்ளன. இவற்றின் தொழில்நுட்ப ஆலோசனைகளை

விவசாயிகளுக்கு வழங்கி மீண்டும் இவ்விவசாயம் உயிர் பெற தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது, என்றார்.

## ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டுக்கு 'புனே' பெல்லாரி வரத்து அதிகரிப்பு

ஒட்டன்சத்திரம், உள்ளூர் வரத்து இல்லாததால், ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் புனே பகுதியில் விளைந்த ெபல்லாரி வரத்து அதிகரித்துள்ளது. ஒட்டன்சத்திரம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் கடந்த சில ஆண்டுகளாக பருவமழை பொய்த்ததால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்துவிட்டது. தொடர் வறட்சி ஏற்பட்டதால் காய்கறி பயிரிடும் நிலப்பரப்பும் வெகுவாக குறைந்து விட்டது. கடந்த சில ஆண்டுகளுக்கு முன் வரை தக்காளி, ெபல்லாரி, மிளகாய் இப்பகுதியில் அதிகமாக பயிரிடப்பட்டது. அப்போது ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் இதன் வரத்து அதிகமாக இருந்தது. தக்காளி கிலோ ஒரு ரூபாய்க்கும் குறைவாக விற்ற நாட்களும் உண்டு.

தக்காளியின் விலை, பறிக்கும் கூலிக்குக்கூட கிடைக்காததால் விவசாயிகள் தக்காளியை ரோட்டோரம் கொட்டிச் சென்ற சம்பவமும் நடந்தது. இப்பகுதியில் சின்ன வெங்காயம் அதிகமாக பயிரிடப்பட்டு வந்த போதிலும், ெபல்லாரி பயிரிடப்படும் பரப்பு குறைவாகவே உள்ளது. உள்ளூர் விளைச்சல் இல்லாததால், தற்போது மகாராஷ்டிரா மாநிலம் புனே பகுதியில் விளைந்த ெபல்லாரி வெங்காயம் இங்கு கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. நேற்று ெபல்லாரி வெங்காயம் கிலோ ரூ.10 முதல் ரூ.15 வரை விற்றது. இதே போல் உள்ளூர் முருங்கை வரத்து இல்லாத நாட்களில் பரோடா பகுதியில் இருந்து கொண்டு வரப்படுவது வழக்கம்.

## விவசாயிகளுக்கு பயிற்சி

முதுகுளத்தூர், முதுகுளத்தூர் அருகே உலையூரில் உறுதுணை சீரமைப்பு திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு நெல்விதை திட்ட பயிற்சி வழங்கப்பட்டது. வேளாண் உதவி இயக்குனர் (பொறுப்பு) மனோகரன் தலைமை வகித்தார். வேளாண் உதவி இயக்குனர்(ஓய்வு) சுந்தரேசன், விதைச்சான்று அலுவலர் பொன்னுச்சாமி முன்னிலை வகித்தனர். துணை வேளாண் அலுவலர் ஞானவீரன் வரவேற்றார். வரும் காலங்களில் நெல் விதை உற்பத்தியை பெருக்க அதிக அளவில் விதைப்பண்ணைகள் அமைக்க விவசாயிகளுக்கு அறிவுரை

வழங்கப்பட்டது. வேளாண் காப்பீடு திட்டம், நெல் விதை தேர்வு, களை நிர்வாகம், ஒருங்கிணைந்த உர நிர்வாகம், பூச்சி கொல்லி, நோய் நிர்வாகம், அறுவடை, விதை சேமிப்பு, விதை பண்ணை பதிவு, வயலாய்வு காரணிகள், கலவான் கண்டறிதல் ஆகியவை குறித்து செயல்முறை விளக்கம் மூலம் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

ஏற்பாடுகளை வட்டார தொழில் நுட்ப மேலாளர் ஹேமலதா, உதவி வேளாண் அலுவலர் அன்புசெல்வி செய்தனர்.

## கதிரடிக்கும் களத்தை சீரமைக்க வேண்டும்

பள்ளிபாளையம்: களியனூரில், கதிரடிக்கும் களத்தை பராமரிக்க கோரிக்கை எழுந்துள்ளது. பள்ளிபாளையம் அடுத்த, களியனூர் விவசாயிகள் நிறைந்த பகுதியாகும். இந்த பகுதியில், கடந்த, 2003ல் கதிரடிக்கும் களம் அமைக்கப்பட்டது. இதில், அறுவடை செய்யப்பட்ட நெல்லை பிரித்து அடிப்பர். எள் மற்றும் விளைபொருட்களை உலர வைப்பதற்கும் களம் பயன்படுத்தப்பட்டு வந்தது. தற்போது, சரியான பராமரிப்பு இல்லாததால், கதிரடிக்கும் களத்தை பயன்படுத்த முடியாத நிலை உள்ளது. கடந்த சில ஆண்டுகளாக, காட்சி பொருளாகவே காணப்படுகிறது. தற்போது, அதில், முட்புதர் வளர்ந்து, பல இடங்களில் சேதம் அடைந்துள்ளது. கதிரடிக்கும் களத்தை சீரமைத்து, பயன்பாட்டிற்கு கொண்டுவர, அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## நெல்லுக்கு பதிலாக மக்காசோளம் பயிரிட வேளாண்துறை அறிவுரை

குமாரபாளையம்: நெல்லுக்கு பதிலாக மக்காசோளம் பயிரிட, வேளாண்துறை சார்பில் நடந்த முகாமில் அறிவுறுத்தப்பட்டது. குமாரபாளையம் அடுத்த, குப்பாண்டபாளையம் ஊராட்சியில், வட்டார வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகாமை திட்டம் மூலம், விதை கிராம திட்டப்பயிற்சி முகாம் நடந்தது. மாவட்ட வேளாண் இணை இயக்குனர் கலியராஜ் தலைமை வகித்தார். இதில், விவசாயிகளுக்கு மானியவிலையில் ரொட்டவேட்டர், ராகி, பயிறுவகை, விதைகள், பைப் லைன் ஆகியவை வழங்கப்பட்டன. மேலும், அம்மா பண்ணை மகளிர் கிட்ட குழுவினர்கள் மற்றும் விவசாயிகள் பங்கேற்ற பயிர் இன்சூரன்ஸ் திட்ட விழிப்புணர்வு பேரணி நடந்தது. அதில் இணை இயக்குனர் பேசியதாவது:

வாய்க்காலில் தண்ணீர் இல்லை; போர்வெல்களிலும் தண்ணீர் இல்லை; போதிய மழையும் இல்லை என்பதால், குறைந்த அளவிலான தண்ணீரை வைத்து மாற்றுப்பயிராக மக்காசோளம் பயிரிட கூறி வருகிறோம். குறுகிய காலத்தில் மகசூல் எடுக்காலும், பயிர் இழப்பீட்டு தொகை பெற்றுக்கொள்ளலாம்.இவ்வாறு அவர் பேசினார்.

**தினகரன்**

**இன்றைய வேளாண் செய்திகள்**

## கொட்டகம்பையில் ஆரஞ்சு விளைச்சல் அமோகம்

கோத்தகிரி : கோத்தகிரி சுற்றுவட்டார பகுதிகளில் தேயிலை தோட்டங்களிலும், சாலையோரங்களிலும், வீடுகளிலும் ஆரஞ்சு பயிரிடப்பட்டு வளர்க்கப்படுகிறது. இங்கு விளையும் கமலா ஆரஞ்சு சிறிதாக இருக்கும். அதிக சுவையுள்ளதாகவும் இருப்பதால் ஒரு கிலோ ரூ.200 வரை விற்பனை செய்யப்படுகிறது. தற்போது லேசான மழை பெய்து வரும் நிலையில் ஆரஞ்சு மரங்களில் ஏராளமான பழங்கள் பழுத்து தொங்குகிறது.

## பட்டுநூல் விலை ஒரே நாளில் கிலோவிற்கு ரூ.115 உயர்வு

கோவை, : கோவை பட்டுவளர்ச்சித்துறை அலுவலகத்தில் உள்ள பட்டுக்கூடு விற்பனை மையத்தில் தினசரி பட்டுக்கூடு விற்பனை ஏல முறையில் நடக்கிறது. இங்கு நேற்று நடந்த விற்பனைக்கு சுமார் 1,300 கிலோ பட்டுக்கூடுகள் விற்பனைக்கு வந்தது. கோவை, திருப்பூர் மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் கொண்டு வந்தனர். இவற்றை வியாபாரிகள் மற்றும் பட்டுநூல் கூட்டுறவு சங்கத்தினர் கொள்முதல் செய்தனர்.

விற்பனையில், ஒரு கிலோ பட்டுக்கூடு குறைந்தபட்ச விலை கிலோ ரூ.277 ஆகவும், அதிகபட்ச விலை ரூ.439 ஆகவும், சராசரி விலை ரூ.373 ஆகவும்

இருந்தது. பட்டுக்கூடு விலையானது, அன்றாடம் தமிழகத்தில் நிர்ணயம் செய்யப்படும் பட்டுநூல் விலைக்கேற்ப ஏற்ற, இறக்கம் அடைகிறது. நேற்று பட்டு நூல் விலை கிலோ ரூ.2,993 ஆக இருந்தது. ஒரு நாளுக்கு முன்பு நிலவிய பட்டுநூல் விலையை காட்டிலும் நேற்று பட்டுநூல் விலை கிலோவிற்கு ரூ.115 அதிகரித்தது. ஆனால், பட்டுக்கூடு சராசரி விலை கிலோவிற்கு ரூ.30 குறைந்தது.

## தேயிலை செடிகளில் கொப்புள நோய்

குன்னூர், : ஊட்டி, கோத்தகிரி, குன்னூர் ஆகிய பகுதிகளில் தேயிலை செடிகளில் கொப்புள நோய் தாக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எஞ்சிய விளை நிலங்களில் பயிரிடப்பட்டுள்ள உருளைக்கிழங்கு சாகுபடி அறுவடை 80 சதவீதம் முடிந்துள்ளது. மீதமுள்ள உருளைக்கிழங்கு பயிர்களில் பின் கருகல் நோய் தாக்க வாய்ப்புள்ளதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். தோட்டக்கலைத்துறை இணை இயக்குனர் மணி (பொறுப்பு) கூறியதாவது:

தேயிலை தோட்டங்களில் கொப்புள நோய் தாக்குவதற்கான வாய்ப்புள்ளது. விவசாயிகள் நோயை கட்டுப்படுத்த காப்பர் ஆக்ஸி குளோரைடு பூச்சிக் கொல்லி மருந்தையும் உருளைக்கிழங்கு தோட்டங்களில் பின் கருகல் நோய் தாக்கும் என்பதால் மேங்கோ செப் பூச்சிக் கொல்லி மருந்தையும் தெளிப்பதன் மூலம் நோயை கட்டுப்படுத்தலாம் என கூறினார்.

## பூக்கள் விலை பாதியாக குறைந்தது

பொள்ளாச்சி, : பொள்ளாச்சி தேர்நிலை பூ மார்க்கெட்டுக்கு சுற்றுவட்டார கிராம பகுதிகளிலிருந்தும், வெளியூர்களில் இருந்தும் பூக்கள் அதிகளவில் கொண்டு வரப்படுகின்றன. இங்கு வரும் பூக்களை உள்ளூர், கேரள மாநில வியாபாரிகள் மொத்தமாக வாங்கி செல்கின்றனர். இந்த மாத இறுதியில் மார்க்கெட்டுக்கு பூவரத்து சற்று அதிகமாக இருந்தது. அப்போது சரஸ்வதி பூஜை மற்றும் ஆயுத பூஜை உள்ளிட்ட விஷேச நாட்கள் இருந்ததால் பூக்கள் விலை அதிகமாக இருந்தது. ஒரு கிலோ மல்லிகை ரூ.800 வரையிலும், பெங்களூரு மல்லி ரூ.750க்கும், கனகாம்பரம் ரூ.560க்கும், செண்டுமல்லி ரூ.450க்கும், செவ்வந்தி ரூ.400க்கும், கோழிக்கொண்டை ரூ.180க்கும், மரிக்கொழுந்து ரூ.160க்கும், அரளி ரூ.200க்கும் விற்பனையானது.

இந் நிலையில், கடந்த இரண்டு வாரமாக சுற்றுவட்டார கிராமங்களில் பூக்கள் அறுவடை குறைந்தது. இதனால், மார்க்கெட்டுக்கு பூக்கள் வரத்து குறைவாக உள்ளது. ஆனாலும், மார்க்கெட்டுக்கு கொண்டு வரப்பட்ட பூக்கள் குறைவான விலைக்கே நேற்று விற்பனை செய்யப்பட்டது. இதில் ஒரு கிலோ மல்லி ரூ.300க்கும், பெங்களூரு மல்லி ரூ250க்கும், கனகாம்பரம் ரூ.130க்கும், செண்டுமல்லி ரூ.40க்கும், செவ்வந்தி ரூ.80க்கும், கோழிக்கொண்டை ரூ.30க்கும், அரளி ரூ.80க்கும் என குறைந்த விலைக்கு விற்றதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

## விதை கிராமத் திட்ட பயிற்சி

திருச்சி, : வையம்பட்டி வட்டார வேளாண்மைத்துறை சார்பில், வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா) திட்டத்தின் கீழ் எண்ணெய் வித்துகளில் விதை கிராம திட்ட விவசாயிகள் பயிற்சி லெட்சம்பட்டியில் நேற்று நடந்தது. வேளாண்மை உதவி இயக்குநர் சந்தான கிருஷ்ணன் தலைமை வகித்தார்.விதைச் சான்று அலுவலர் முத்துச்செல்வி வேளாண்மையில் விதையின் முக்கியத்துவம் மற்றும் எண்ணெய்வித்து பயிர்களில் விதை உற்பத்தி தொழில்நுட்பம் பற்றி பேசினார்.

வேளாண்மை அலுவலர் ராபர்ட் ரிச்சர்டு மண்வள மேலாண்மை மற்றும் நுண்ணீர் பாசன முறை பற்றி எடுத்து கூறினார். துணை வேளாண்மை அலுவலார் இராமதிலகம் வேளாண்மைத்துறை சார்ந்த மான்ய திட்டங்கள் பற்றி பேசினார். ஏற்பாடுகளை அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் அஸ்வினி, உதவி தொழில்நுட்ப மேலாளர் தினேஷ்குமார் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்கள் சுப்பையா, ராஜா ஆகியோர் செய்திருந்தனர்.

## நெல்சாகுபடி விவசாயிகள் வரப்பு ஓரத்தில் உளுந்து பயிரிட்டு கூடுதல் வருமானம் பெறலாம்

பெரம்பலூர்: பெரம்பலூர் மாவட்ட வேளாண்துறை இணை இயக்குநர் சந்திரன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: பெரம்பலூர் மாவட்டத்தில், தற்போது பரவலாக மழை பெய்து வருகிறது. இந்த மழையினைப் பயன்படுத்தி நடப்பு பருவத்தில், நெல் சாகுபடிக்கு ஏற்ற நெல் ரகங்களான கோ-50, கோ-51, ஏடிடி50, ஏடிடி&-45 மற்றும் உளுந்து சாகுபடிக்கு ஏற்ற ரகங்களான சேகர்-1,வம்பன்-5, வம்பன்-

6ஆகியவை வட்டாரவேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நெல் லுக்கு கிலோவிற்கு ரு10சதவீதம் மானியமும், தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் உளுந்திற்கு கிலோவிற்கு ரூ25சதவீதம் மானிய விலையில் வழங்கப்படுகிறது.மேலும், தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் உளுந்து செயல்விளக்கம் அமைக்க எக்டேருக்கு ரூ5ஆயிரமும், மக்காச்சோளம், உளுந்து பயிர்சுழற்சி செயல்விளக்கம் அமைக்க எக்டேருக்கு ரூ10ஆயரமும் மானியமாக வழங்கப்படுகிறது. தேசிய வேளாண் வளர்ச்சித்திட்ட இயக்கத்தின் கீழ் நெல் இயந்திர நடவு செயல் விளக்கம் அமைக்க எக்டேருக்கு ரூ.5ஆயிரமும் மானியம் வழங்கப்படுகிறது. நெல்சாகுபடி செய்யும் விவசாயிகள் தங்களின் வரப்புகளின் ஓரத்தில் உளுந்து பயிரிடுவதன் மூலம் கூடுதல் வருமானமும் நன்மை செய்யும் பூச்சிகளின் எண்ணிக்கையும் பெருக்க முடியும். விவசாயிகளின் விதை மற்றும் இடுபொருள் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்கள் ஒவ்வொரு வாரம் சனிக்கிழமையும் செயல்படும் என தெரிவித்துள்ளார்.

## புதுகை மாவட்டத்தில் வேளாண் திட்ட பணிகள்

புதுக்கோட்டை : புதுகை மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் வேளாண் மற்றும் தோட்டக்கலைத்துறை திட்டப் பணிகளை கலெக்டர் கணேஷ் வேளாண் இயக்குநர் தட்சிணாமூர்த்தி, தமிழ்நாடு நீர்வடிப்பகுதி முகமை செயல் இயக்குநர் டாக்டர் அனந்தகுமார் ஆகியோர் முன்னிலையில், வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலர் (வேளாண் துறை) ககன்தீப் சிங்பேடி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இதில் கந்தர்வக்கோட்டை வட்டார தெத்துவாசல்பட்டி தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கியில் அமைக்கப்பட்டுள்ள புதிய பயிர்க் காப்பீட்டு திட்ட பொதுச்சேவை மையத்தினை பார்வையிட்டு இத்திட்டத்தில் பங்கேற்றுள்ள விவசாயிகளின் எண்ணிக்கை குறித்து ஆய்வு செய்யப்பட்டது. அரியாணிப்பட்டியில் விதை கிராமத்திட்ட நெல் விவசாயிகள் பயிற்சி ஆய்வு செய்து, கையேடுகள் வழங்கப்பட்டது. பின்னர் நெல் வயல் வரப்புகளில் உளுந்து விதை விதைப்பு பணி துவக்கப்பட்டது. விவசாயிகளுக்கு மானிய விலையில் தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன. மேலும் சிறுதானிய நுண் சத்து இட்ட நுண்ணீர்ப் பாசன திட்டம் செயல்படுத்தப்பட்ட மக்காச்சோள வயலினை பார்வையிட்டு நுண்ணீர்ப் பாசன பயன்கள் குறித்து விவசாயிகளிடம்

கலந்துரையாடப்பட்டது. காடவராயன்பட்டியில் வேம்பு மரக்கன்றுகளை நடவு பணி துவக்கி வைத்தும், முதுகுளத்தில் 5 ஏக்கர் பரப்பளவில் நுண்ணீர் பாசனத்தில் அமைக்கப்பட்டுள்ள பசுந்தாள் உரப்பயிர் சணப்பு வயல் ஆய்வு செய்யப்பட்டது. புனல்குளம், புதுநகரில் நுண்ணீர் பாசன திட்டத்தின் கீழ் 4.70 எக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்ட மா செடிகளும் பார்வையிட்டு நீர்ப்பாய்ச்சும் முறை கேட்டறியப்பட்டது.

ஆதனக்கோட்டையில் இயந்திர நெல் நடவுப்பணிகள் பார்வையிட்டு விவசாயிகளுக்கு தேசிய வேளாண் வளர்ச்சித்திட்ட பின்னேற்பு மானியம் சென்றடையும் விபரம் கேட்டறியப்பட்டது. அன்னவாசல் ஒன்றியம், திருவேங்கை வாசல் அன்னத்தூரணியில் பசுமை போர்வை திட்டத்தின் கீழ் நடவு செய்யப்பட்டுள்ள மரப்போத்துக்களை பார்வையிட்டும், பெருமாநாட்டில் 2400 ச.மீ பரப்பளவில் மானிய விலையில் அமைக்கப்பட்டுள்ள பசுமை குடில் வெள்ளரி சாகுபடி பணி ஆய்வு செய்யப்பட்டது. குடுமியான்மலை ஸ்டாமின் வளாகத்தில் விவசாயிகளுக்கு மானிய விலையில் 12 பவர்டிரில்லர் கருவிகள், 4 ரோட்டவேட்டர் கருவிகள், 2 டிராக்டர் கருவிகள், 4 அலகு நீர் கொணரும் குழாய்கள், 20 தெளிப்பான்கள் வழங்கப்பட்டது. மாவட்டத்தில் நடப்பாண்டில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள 15 பண்ணை மகளிர் குழுக்களுக்கு வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை மூலம் தொழில் தொடங்க ஒவ்வொரு குழுவிற்கும் தலா ரூ.10,000 மதிப்பில் சுழல் நிதிக்கான காசோலைகள் வழங்கப்பட்டது.

குடுமியான்மலை ஸ்டாமின் வளாகத்தில் புதிதாக கட்டப்பட்டு வரும் மாநில வேளாண் விரிவாக்க மேலாண்மை மைய பயிற்சி கட்டிட கட்டுமானப்பணி ஆய்வு செய்யப்பட்டது. மேலும் ஸ்டாமினில் நுண்ணூட்ட கலவை உற்பத்தி மையம், உயிர் உர உற்பத்தி மையம், மண் பரிசோதனை ஆய்வகம், மத்திய கட்டுப்பாட்டு ஆய்வகம் போன்றவைகளில் உற்பத்தி முறை குறித்து அலுவலர்களிடம் கேட்டறியப்பட்டது. குன்றாண்டார்கோவில் வட்டாரம், குளத்தூரில் இயந்திர நெல் நடவு வயல், வரப்புகளில் உளுந்து சாகுபடி வயல் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. விவசாயிகள் அரசின் வேளாண் திட்டங்களை முழுவதுமாக

பெற்று வேளாண் உற்பத்தியை அதிகரித்து வருமானத்தை பெருக்கி பயன்பெற வேண்டும் என்று வேளாண் உற்பத்தி ஆணையர், அரசுச்செயலர் (வேளாண்) ககன்தீப் சிங்பேடி தெரிவித்தார். இந்த ஆய்வின் போது ஸ்டாமின் இயக்குநர் சங்கரலிங்கம், மாவட்ட வேளாண் இணை இயக்குநர் அண்ணாமலை உள்ளிட்ட உயர் அதிகாரிகள் பலர் உடனிருந்தனர்.

## முத்துப்பேட்டையில் 2,000 பனை மர விதை நடும் நிகழ்ச்சி

முத்துப்பேட்டை : முத்துப்பேட்டை ரோட்டரி சங்கம் சார்பில் இடும்பாவனம் கந்தபரிச்சான் ஆற்றுக்கரையில் 2,000க்கும் மேற்பட்ட பனங்கொட்டைகள் நடப்பட்டது. சங்க தலைவர் கோவி.ரெங்கசாமி கலந்து கொண்டு பணியை துவக்கி வைத்தார். மாவட்ட தலைவர் பாலகிருஷ்ணன் முன்னிலை வகித்தார். இதில் கிராம முக்கிய பிரமுகர் பாலா உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

## பயறு வகைகளில் அதிக விளைச்சல் பெற டி.ஏ.பி.கரைசல்

பழநி, :பயறு வகைகளில் அதிக விளைச்சல் பெற்றிட டி.ஏ.பி. கரைசல் பயன்படுத்த வேண்டுமென வேளாண் அதிகாரிகள் ஆலோசனை வழங்கி உள்ளனர்.பழநி பகுதியில் 10 ஆயிரம் எக்டேருக்கு மேல் பயறு வகைகள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மானாவாரியாக பயிரிடப்பட்டுள்ள பயிறுவகைகளில் நல்ல தரமான மணிகளை பெற வேளாண் அதிகாரிகள் கூறியதாவது, தரமான பயிர்களை பெற்றிடவும், கூடுதல் மகசூல் பெற்றிடவும் டி.ஏ.பி. கரைசலை இருமுறை தெளிக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு 2 கிலோ டி.ஏ.பி. உரத்தினை முதல் நாள் 10 லிட்டர் நல்ல தண்ணீரில் ஊற வைக்க வேண்டும்.

மறுநாள் மாலை ஊற வைத்த கரைசலில் இருந்து தெளித்த நீரை வடித்து எடுத்து அதனை 190 லிட்டர் நல்ல தண்ணீரில் கலந்து கைத் தெளிப்பான் மூலமாக பூக்கும் தருவாயில் ஒரு முறையும் மறுமுறை மேற்கூறிய முறையில் மீண்டும் 10 முதல் 15 நாள் இடைவெளியில் கைத் தெளிப்பான் மூலமாக 200 லிட்டரில் கலந்து தெளிக்க வேண்டும். அதன் மூலமாக அதிகப்படியான பூக்களும், திறட்சியான மணிகளும் நல்ல விளைச்சலும் பெறலாம்.தற்சமயம் டி.ஏ.பி. கரைசல் விரிவாக்க மையத்தில் மான்ய விலையில் வழங்கப்பட்டு வருகின்றது. தேவைப்படும் விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண்மை உதவி அலுவலரிடம் உரிய மானிய விண்ணப்பம் பெற்று வாங்கிக் கொள்ளலாம் வேளாண்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## சின்னசுருளிக்கு நீர்வரத்து அதிகரிப்பு

ஆண்டிபட்டி, : தேனி மாவட்டம் ஆண்டிபட்டி அருகே உள்ள மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதியில் கடந்த சில நாட்களாக அவ்வப்போது மழை பெய்து வருகிறது. இதனால் கடந்த சில மாதங்களாக சுட்டெரித்த வெயில் தணிந்து குளிர் காற்று வீசுகிறது. தொடர் மழையால் ஆண்டிபட்டியருகே உள்ள மேகமலை சின்னசுருளி அருவியில் நீர்வரத்து துவங்கியுள்ளது. இதனால் சுற்றுலாப்பயணிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்

ஆர்.எஸ்.மங்கலம். : ஆர்.எஸ்.மங்கலம் வட்டாரத்தில் கீழ்ஆயங்குடி கிராமத்தில் விதை கிராம திட்ட பயிற்சி நடைபெற்றது. துணை வேளாண்மை அலுவலர் ராமகிருஷ்ணன் வரவேற்றார். வேளாண்மை உதவி இயக்குனர் மோகன்ராஜ் வேளாண்மை துறையின் முக்கியத்துவம், செயல்பாடுகள், திட்டங்கள் குறித்து பேசினார். விதை சாண்று உதவி இயக்குனர் சேக் அப்துல்லா விதைப்பண்ணை, பயிர்பாதுகாப்பு மற்றும் உர நிர்வாகம் பற்றி விளக்கினார். உயிர் உரங்கள், நுண்ணுயிர் உரங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது. உதவி வேளாண்மை அலுவலர் வனிதா, உதவி தொழில் நுட்ப மேலாளர் ராம்குமார், முருகானந்தம் நல்விதை தேர்வு, விதை கடினபடுத்துதல், பூஞ்சாண் விதை நேர்த்தி குறித்து செயல் விளக்கம் செய்தனர். வட்டார தொழில் நுட்ப மேலாளர் அன்னலெட்சுமி நன்றி கூறினார்.

## மீனவ பெண்கள் அமைத்த பண்ணையில் காளான் அறுவடை

ராமேஸ்வரம், : ராமேஸ்வரம் விவேகானந்தா குடிலில் மீனவ பெண்களால் அமைக்கப்பட்ட பண்ணையிலிருந்து நேற்று நன்கு வளர்ந்த காளான்கள் அறுவடை செய்யப்பட்டது.ராமேஸ்வரம் அருகிலுள்ள ராமகிருஷ்ணபுரம் சுவாமி விவேகானந்தா குடில் வளாகத்தில் மீனவ பெண்களால் பகுதி நேர தொழிலாக காளான் பண்ணை அமைக்கப்பட்டது. ஒரு மாதம் முன்பு அமைக்கப்பட்ட இப்பண்ணையில் வைக்கோல் நிரப்பப்பட்ட பிளாஸ்டிக் பைகளில் காளான் விதைகள் தூவப்பட்டு பெண்களால் பராமரிக்கப்பட்டு வந்தது. 15 நாட்கள் கழித்து வளர்ப்பு மையத்தில் வைக்கப்பட்ட சிறிய காளான்கள் 30 நாட்களில் அபரிதமாக வளர்ந்துள்ளது.நேற்று நன்கு வளர்ந்த காளான்கள் அறுவடை செய்யும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதையொட்டி நேற்று காலை காளான் வளர்ப்பு பயிற்சியாளர் ராமு மற்றும் மீனவ பெண்கள் காளான்களை தூரோடு பிடுங்கி அறுவடை செய்தனர்.

நேற்று 50 கிலோ வரை காளான்கள் அறுவடை செய்யப்பட்டது. இவற்றை கிலோ ரூ.200 வீதம் உள்ளூர் மக்களே விலைக்கு வாங்கி சென்றனர். நன்கு வளர்ச்சி பெற்ற மீதமுள்ள காளான்களும் இன்று பெண்களால் அறுவடை செய்யப்படவுள்ளது. குடில் நிர்வாகி சுவாமி பிரணவானந்தா, மீனவர் சங்க தலைவர் குமரேசன், ராம்கோ கூட்டுறவு அங்காடி பொறுப்பாளர் வேடராஜன் உட்பட பலர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.